பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
07 07 2025 **MONDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. ரயில்வே துறை கடந்த 11 ஆண்டுகளில் மிகப் பெரும் மாற்றங்களை அடைந்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. நம் நாட்டின் பாரம்பரிய கலையான யோகாவை அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழகத்தில் அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை மாநில அரசு மறுத்துள்ளது.

5. ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது..

>>>>>><<<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பிரிக்ஸ் 17வது உச்சிமாநாட்டில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிக்ஸ் அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள், இந்த தாக்குதலை கண்டித்திருப்பதுடன், பயங்கரவாதம் எந்தவடிவில் இருந்தாலும் அதற்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவது என்று உறுதிஅளித்துள்ளன.

எல்லை தாண்டிய தீவிரவாத இயக்கங்களை முறியடிப்பதற்கும், அதுபோன்ற அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குவதற்கு எதிராகவும், தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பவர்களுக்கு எதிராகவும், பிரிக்ஸ் அமைப்பு நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் உறுதிபூண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் சமமான, குறைந்த கட்டணத்தில் சுகாதார சேவைகளை வழங்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, நாளிதழ் ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்டுரையில், நாட்டின் முன்னேற்றம் என்பது அனைத்து தரப்பு மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் சுகாதார சேவைகள் கிடைப்பதை பொறுத்தே அமையும் என்று கூறினார்.

அந்த வகையில், இ-சஞ்சீவனி போன்ற திட்டங்கள் மக்களின் சுகாதாரத்தை உறுதி செய்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஐந்து கோடியே 46 லட்சம் குழந்தைகளுக்கும், ஒரு கோடியே 32 லட்சம் கர்ப்பிணி பெண்களுக்கும் இந்திரதனுஷ் திட்டத்தின் கீழ் தடுப்பூசி போடப்பட்டிருப்பதாகவும் திரு. ஜெபி. நட்டா கூறினார்.

>>>>>><<<<<<

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் 33 ஆயிரம் கிலோமீட்டர் புதிய ரயில்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம், **Samastipur** -ல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் ரயில்வே துறை மிகப் பெரும் மாற்றங்களை அடைந்துள்ளதாக கூறினார்.

நாடுமுழுவதும் ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

முந்தைய காங்கிரஸ் ஆட்சியுடன் ஒப்பிடும்போது, ரயில்வே துறைக்கான நிதிஒதுக்கீடு 10 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

யோகா நம் நாட்டின் பாரம்பரிய கலை என்றும், ஆரோக்கியமான வாழ்விற்கு அந்த கலையை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்றும் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று பிரதமரின் மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ், "நலமான பாரதம் - வளமான பாரதம்" என்ற முகாமை தொடங்கி வைத்து பேசிய அவர், கடந்த மாதம் கொண்டாடப்பட்ட சர்வதேச யோகா தினத்தன்று கின்னஸ் சாதனை படைக்கப்பட்டதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 35 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 4 அறிக்கைகள், முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினிடம் இன்று வழங்கப்பட்டது.

திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவரும், துணை முதலமைச்சருமான திரு. உதயநிதி ஸ்டாலின், திட்டக் குழுவின் செயல் துணைத்தலைவர் திரு. ஜெயரஞ்சன் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரிடம் இந்த அறிக்கைகளை வழங்கினர்.

தமிழகத்தில் பயன்பாட்டில் இல்லாத சுரங்கங்களின் மறுசீரமைப்புக்கான சாத்தியகூறுகளை மதிப்பீடு செய்தல், குழந்தைகளின் ஊட்டச்சத்து பிரச்சினையில் உள்ள முக்கிய சவால்கள் மற்றும் தீர்வுகள் இரண்டாம் நிலை நகரங்களில், நகர்ப்புற மீள்தன்மையை மேம்படுத்துவதற்கான இயற்கையான தீர்வு கட்டமைப்பு, காலநிலை மாற்றங்கள் குறித்த அடுத்த பத்தாண்டுகளுக்கான மதிப்பீடு ஆகிய அறிக்கைகள் முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை உள்ளிட்ட 10 துறைகளின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் உள்ள 8 மலைகிராமங்களுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்ட அவர், அங்கு வாழும் மலைவாழ் மக்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்தார்.

மலை வாழ் மக்களின் நலனுக்காக மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை பட்டியலிட்ட அமைச்சர், அனைவரும் இதனை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் மறுத்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக, 501 அங்கன்வாடி மையங்கள் மூடப்பபட்டதாக வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 6 மாதங்களாக மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக அங்கன்வாடி மையங்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், அவை தற்போது அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரிசீலனைக்குப் பின்னர், 54 ஆயிரத்து 483 அங்கன்வாடி மையங்களை தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் தேர்தல் பிரச்சார பயணத்தை இன்று தொடங்கியுள்ளார்.

காலையில் விவசாயிகள், நெசவாளர்களுடன் கலந்துரையாடிய அவர், மாலையில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மாநில பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் நடைபயணமாக சென்று மக்களை சந்தித்தார்.

>>>>>><<<<<<

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் இன்று குடமுழுக்கு நடைபெற்று முடிந்த நிலையில், ஆயிரக்கணக்கானோர் சாமிதரிசனம் செய்து வருகின்றனர்.

பக்தர்களின் நெரிசலை சமாளிக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பபட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 42 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர், இதனை தெரிவித்தார்..

(சவுண்ட் பைட் - செந்தாமரை 48 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்நாள் கூட்டம் ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ,ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள புத்தக திருவிழாவில் மாணவர்கள், தாங்கள் சேமித்த பணத்தைக் கொண்டு புத்தகங்களை வாங்கி பயன்பெற வேண்டும் என்று ஆட்சியர் திரு. ஆகாஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளதை அடுத்து, அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு 27 ஆயிரத்து 500 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மனுபாக்கர், **Anjum Moudgil, Saurabh Chaudhary, Aiswary Pratap Singh** உள்ளிட்ட 35 பேர் இதில் இடம்பெற்றுளள்ளனர்.

கஜகஸ்தானில் அடுத்த மாதம் 16ஆம் தேதி முதல் 30ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

அஸ்தானாவில் நடைபெற்ற உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் 11 பதக்கங்களை வென்ற இந்திய அணியினருக்கு மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாணடவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

>>>>>>**END**<<<<<<